Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# மாமல்லபுரம் குடைவரை கற்கோயில்கள்

முனைவர்.இரா.சுமதி
உதவிப்பேராசிரியர்
அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி,
புல்லங்குடி. இராமநாதபுரம்.

101

**ஆய்வு நோக்கம்:**

மாமல்லபுரத்தில் கி.பி 7-ஆம் நூற்றாண்டில் தனிப்பெரும் கற்பாறைகளைக் குடைந்தும் புராணச்சிறப்புடன் சிற்பங்களைச் செதுக்கியும் ஒற்றைக்கல் கோவில்களாக்கியும் பல்லவர்கள் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் கலை நுணுக்கத்தையும் தொழில்நுட்பத்தையும் இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லலே இக்கட்டுரையின் நேக்கம்.

**ஆய்வுச் சுருக்கம்:**

பல்லவர் காலத்தில் எடுக்கப்பட்ட ஒற்றைக்கல் கோயில் குடைவரைக் கோயில் கட்டுமானக்கோயில் ஆகியவை தமிழகக் கோயில் கட்டடக் கலைக்கு பெரிதும் துணை நின்றுள்ளன. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் கோயில்கள் எல்லாம் அவன் காலத்திலிருந்த செங்கல் சுண்ணாம்பு மரம் கொண்டு கட்டப்பட்டு மூங்கில் கூரை அமைத்து வேலைப்பாடு கொண்ட செப்புத் தகடுகள் அறைந்த கோயில்களைப் போன்றவையே என்பதைப் பார்த்ததும் கூறிவிடலாம். சுருங்கக் கூறின் திராவிடக் கட்டடக்கலைக் கூறுகளின் தாக்கம் பல்லவர்கள் அமைத்த கோயில்களில் அமைந்துள்ளது. கோபுரம்; விமானம் திருச்சுற்று முதலிய கூறுகள் தமிழகத்தில் கட்டப்பட்ட கோயில்களின் பெருவளர்ச்சி எனலாம்.

**முன்னுரை:**

தெய்வ வழிபாட்டு முறைத் தமிழகத்தில் கட்டாயமாக்கப்பட்ட ஒன்றாகும். சுண்ணாம்பு செங்கல் மண் மரம் போன்றவற்றால் கட்டப்பட்ட கோயில்கள் அழிந்து போயின. அவை அழியாமல் இருக்கத்தக்க நிலையில் கோயில்களை கற்களைக் கொண்டும் மலைகளைக் குடைந்து அமைத்த பெருமை பல்லவ மன்னர்களுக்கே உரியது. தமிழ்நாட்டு ஓவிய சிற்பக் கலைகளுக்கு கற்கள் வாயிலாக புத்துயிர் தந்து நிலைக்கச் செய்தனர்;.

**கடற்கரைக் கோயில்:**

மாமல்லபுரத்தில் இப்பொழுதுள்ள கடற்கரைக் கோயிலைக் கட்டியவர் இராசசிம்மன். கரையோரம் மூன்று கோவில்கள் இருந்தன. அவற்றுள் இரண்டு கடலுல் ஆழ்ந்து கொண்டன போலும் அதன் எச்சமாக இரண்டு பலி பீடங்களும் ஒரு கொடிமரமும் இருக்கின்றன. சிவலிங்கம்

ஒன்று கடலை நோக்கியபடி இருக்கிறது. இரண்டு சிவன் கோயில்கள் ஒன்று பெருமாள் கோயில் இப்பொழுது இருப்பது பெருமாளே. திருமங்கை ஆழ்வாரது பாடல் பெற்றத் தலம.; இங்கிருக்கும் இறைவன் சலசயனப் பெருமாள். கடல்நீரானது திருமால் பாதங்களில் அலைமோதியது. இக்கோவிலுக்கு முன் சிவன் கோவில் ஒன்று இராசசிம்மனால் கட்டப்பட்டதால் அந்நிலை மாறியது. இக்கோயில் பிற்காலத்தில் விஜயநகர மன்னனால் புதுப்பிக்கப்பட்டது. கடற்கரையில் இப்பொழுதுள்ள கோயில் ஆறு அடுக்கு கும்ப(விமானத்தை) உடையது. உள்ளறை ஒன்றைக் கொண்டது. அவ்வுள்ளறையைச் சுற்றி திருச்சுற்று இருக்கிறது. இதில் ஒன்பது சிறிய கோயில்கள் இருக்கின்றன. வராக மண்டபக் குன்றின் மீதுள்ள ஓலக்கண்ணேசுவரர் கோவிலும் கடற்கரை ஓரமாக ஒரு கல் தொலைவில் உள்ள முகுந்த நாயனார் கோவிலும் இராசசிம்மன் கட்டியதே. மாமல்லபுரத்திற்கு வடக்கே மூன்று கல் தொலைவில் சாளுவன் குப்பத்தில் உள்ள அதிரணசண்ட மண்டபமும் (சிவனுக்கு அமைத்த குகைக் கோயில்) புலிக்குகையும் இவன் காலத்ததே. ஒன்பது புலிகள் வாயைத் திறந்த வண்ணம் குகையின் முகப்பில் செதுக்கப்பட்டுள்ளன. இதில் எந்த தெய்வத்தின் சிலை வைக்கப்பட்டதென்று தெரியவில்லை. இராசசிம்மன் கட்டிய கோயில்கள் தொலைவில் இருந்து நேக்கின் தருமராசர் தேரைப் போலவே தோன்றும்.

**குகைக் கோயில்கள்:**

கட்டட சிற்ப ஓவியக் கலைகளில் தொடர்ந்து வெற்றியைக் கண்டவர்கள் பல்லவர்கள். தான் பார்த்து ரசித்த கலைகளுக்கு புத்துயிர் கொடுக்க மகாபலிபுரத்தில் மூவகை வேலைப்பாடுகளைக் காட்டியுள்ளான். அவை குகைக்கோயில் தேர்கள் கற்சிலைகள்.

நரசிம்மன் தன் தந்தையைப் போலவே முதலில் மகேந்திரவர்மனைப் பின்பற்றி குகைக்கோயில்களை அமைத்தான். குகைக் கோயில்களில் இவருடைய விருதுப்பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். ~கோவில்களில் ஓவிய வேலை மிகுதியாக இருக்கும். குகைக் கோவிலின் முன் மண்டபச் சுவர்களில் அழகிய சிலைகளும் அணி அணியாய் அன்னப் பறவைகளும் சிறுமணிக்கோவைகளும் வெட்டுவித்திருக்கும். கோயில் தூண்களின் போதிகைகள் உருண்டு காடிகள் வெட்டியிருக்கும். போதிகைக்குக் கீழ்த் தூணின் மேற்புறம் உருண்டும் பூச்செதுக்கப்பட்டும் இருக்கும். தூண்களின் அடியில் இரண்டுமுழ அகலமும் இரண்டுமுழ உயரமும் கொண்டு திறந்த வாயுடன் இருக்கும் சிங்கங்கள் தூண்களைத் தம் தலைமீது தாங்கி இருத்தல் போன்ற வேலைப்பாடு காணப்படும். இவற்றை நோக்கின் இம் மன்னன் தம் பெயரைக் குறிக்கவே இச்சிங்கத் தூண்களை அமைத்தனனோ என்று எண்ணவேண்டியதாக இருக்கிறது~.

மகிடாசுர மண்டபம் வராக மண்டபம் திரிமூர்த்தி மண்டபம் இம்மூன்றும் நரசிம்மன் அமைத்த குகைக்கோயில்கள் ஒவ்வென்றிலும் இறைஉள்ளிடம் (மூலத்தானம்) இருக்கிறது. ஆகவே இவை மண்டபங்கள் அல்ல கோயில்களே. மண்டபத்தூண்களின் வேலைப்பாடுகள் மிகச்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சிறந்தவை. குகைக்கோவில் சுவர்களில் சிற்பவேலைகள் மிகுதியாக உண்டு. இவை சுவர்களை அணிசெய்வதோடு அல்லாமல் சுவர்என்னும் எண்ணத்தையே மறக்கச்செய்கிறது. வராகஅவதாரம் வாமனஅவதாரம் போன்றவை காணப்படுகின்றன. கஜலட்சுமி துர்க்கை இவர்தம் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. மகிடாசுரமண்டபச் சுவரில் பாம்பணைப் பள்ளி (அனந்த சயனம்); போன்ற காட்சிகள் கண்ணைக் கவர்வன. ~மகிடாசுரனை வெல்லுதலைக் குறிக்கும் சிற்பவேலைப்பாடு பல்லவர்களுக்கே உரியது என எண்ணுமளவு அமைந்துள்ளது. துர்க்கை தன் ஊர்தியான சிங்கத்தின் மீது அமர்ந்து எருமைத் தலை கொண்ட அசுரன்மீது அம்புகளைப் பொழிகிறாள் அசுரனைச் சுற்றிலும் அவன் படைகள் இருக்கின்றன. இப்படைகளைப் பொறித்ததால் இக்காட்சி; சிறப்படைந்துள்ளது. இக்காட்சியை அமைத்த சிற்பி சிறந்த அறிஞர் ஆவார். இக்காட்சியைக் காணல் அருமையே இது பல்லவர்க்குரிய தனிச்சிறப்பு என்றே கூறலாம்~.

**ஓற்றைக்கல் கோவில்:**

~நரசிம்மன் ஒரு கல்லையே கோயிலாக அமைக்கும் புதிய வேலையில் இறங்கிப் பெருவெற்றி பெற்றான். இவை கோவில்கள் என்பதை அறியாத பாமரமக்கள் தேர்கள் என்றும் ஐந்து கோவில்கள் ஒரே வரிசையில் இருத்தல் கண்;டும் பாண்டவர் தேர்கள் எனப் பெயரிட்டு அழைத்தனர். அவை இன்றளவும் வழக்கில் உள்ளது. ஐந்து கோவில்களும் வேறு வேறு அமைப்புடையவை தமிழகத்தில் மண் செங்கல் மரம் இவற்றால் இருந்த பழைய கோவில்களை நமக்கு நினைவூட்ட அமைந்தவை. இவை இல்லாவிட்டால் பழங்காலக் கோவில்களைப் பற்றிய எண்ணமே இல்லாது போயிருக்கும்~. மரத்தாலும் மண்ணாலும் ஆன கோவில்களில் உள்ள வேலைப்பாடுகளைப் போன்று அப்படியே கற்கோவில்களில் காணப்பட்டன.

தருமராசர் தேர்: இது சிவன் கோவில.; இது மூன்று தட்டுக்களைக் கொண்ட மேற்பாகத்தை (விமானத்தை) உடையது. (விமானங்கள் 1.தூயது 2.கலப்பு 3.பெருங்கலப்பு என மூவகைப்படும். கல் செங்கல் மரம் முதலியவற்றுல் ஒன்றைக் கொண்டு அமைக்கும் விமானம் தூய விமானம். இவற்றுள் ஏதேனும் இரண்டு பொருள்களைக் கொண்டு அமைப்பது கலப்பு. இரண்டிற்கும் மேற்ப்பட்ட பொருள்களால் அமைப்பது பெருங்கலப்பு. இது கட்டடக்கலை நூல் கூற்றாகும்.) இரண்டாம் தட்டின் நடுவில் உள்ளிடம் வெட்டப்பட்டுள்ளது. அது மாடப்புரை போல சிறியது. அதன் அடியில் சோமஸ் கந்தர் சிலை செதுக்கப்பட்டிருக்கிறது. இக்கோயிலின் கும்பவிமான வளர்ச்சியே கைலாயநாதர் கோவில் கும்பம். அதன் வளர்ச்சியே தஞ்சை கோவில் கும்பம் எனலாம்.

**பீமசேனன் தேர்:**

இக்கோவில் பௌத்த சமயக் கலை வளர்ச்சி தென்னாட்டில் பரவி இருந்ததை மெய்ப்பிக்கிறது. விமானத் தைச்

சுற்றிலும் வழி விடப்பட்டுள்ளது. மேலிடம் 45 அடி நீளம் 25 அடி அகலம் 26 அடி

உயரம் உள்ளது. அது அறச்சாலை அல்லது பொதுஇடம் போல இருக்கிறது. அதன் தூண்கள் அடியில் சிங்கங்களை உடையன. இக்கோவில் அமைப்பை மிகப் பிற்பட்ட காலத்தான சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தின் அமைப்பிற் காணலாம்.

அர்ச்சுனன் தேர்: இது தர்மராசர் தேரைப் போன்றதே. இது சிவன்கோவில். புத்தப்பள்ளி அமைப்பை உடையது. 11 சதுர அடி அமைப்புடையது. விமானம் நான்கு நிலைகளை உடையது.

திரௌபதி தேர்: ~இது போன்ற கோவில் காணக்கிடைத்தல் அருமை. தமிழ்நாட்டில் ஊர்த்தேவதைகளுக்கு இருக்கும் சிறுகோவில் போல் அமைந்துள்ளது. இதன் அடித்தளம் 11 சதுரஅடி உயரம் 18 அடி இதில் உள்ள துர்க்கையின் சிலையில் அமைந்துள்ள வேலைப்பாடு பல்லவர் சிற்ப அறிவை நன்கு விளக்குவதாகும். இங்குள்ள கல்யானை கற்சிங்கம் நந்தி; என்பன காணத்தக்கவை. இக்கோவில் தமிழகத்தின் பண்டைச் சிறுகோவிலை நினைவூட்டுவதாகும்~.

சகாதேவன் தேர்: இது பண்டைப் பௌத்தர் சைத்தியத்தை ஒத்துள்ளது. இதுபோன்ற பெரிய துர்க்கையின் கோவில் சாளுக்கிய நாட்டில் உள்ளது. ஆதலால் இருவரும் தங்கள் கலை நுட்பத்தைப் பாராட்டிக் கொண்டனர். இத்தேர் போன்ற அமைப்புடைய விமானங்கள் பல பிற்காலத்தில் காணப்பட்டன.

பரமேசுவரன் கணேசர் கோவில் ஒன்றை ஒரு கல்லால் அமைத்தான். இராமாநுசர் மண்டபம் என்பதையும் அமைத்தான். தர்மராசர் தேரின் முன்றாம் அடுக்கை முடித்தான். அந்த அடுக்கில் ~ரணசயன் அத்யந்த காமப் பல்லவேசுவர க்ருகம~; என்பவற்றை வெட்டுவித்தான். இவன் கணேசர் கோவிலில் வெட்டுவித்த 11 வடமொழி சுலோகங்கள் படித்து இன்புறத்தக்கவை. அவை அரசனுக்கும் சிவனுக்கும் பொருள் பொருந்தும்படி சிலேடையாக அடைந்தவை. இவன் கட்டுவித்தவை யாவும் சிவன் கோவில்களே என்பதை அவ்விடங்களில் உள்ள கல்வெட்டுக்களால் நன்கு அறியலாம்.

**கற்ச்சிற்பங்கள்:**

பறைகள் மீது புராணக் கதைகளை படங்கள் வாயிலாக விளக்கும் முறையில் பெயர் பெற்றவன் நரசிம்மன். இதற்கு மகிடாசுரமண்டப சுவற்றில் உள்ள சிற்பங்களே போதியவை.எனினும் அவற்றைவிட பெரிய பாறைகள் மீது செதுக்கப்பட்டுள்ள கோவர்த்தன மலையை கண்ணன் ஏந்தி நிற்றல் கங்கைக் காட்சி ஆகிய இரண்டுமே கன்கொள்ளாக் காட்சிகள்.

கோவர்த்தன மலையைப் பிடித்துள்ள கண்ணனும் அருகில் உள்ள பலராமனும் பெரியவர்களாக தெய்வத்தன்மை வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். ஏனையோர் சிறியவர்களாகக் காணப்படுகின்றனர். அம்மக்களது கவலை கொண்ட முகமும் சிறிது

தெளிவடைந்த மனநிலையும் சிலைகளில் நன்கு உணர்த்தப்பட்டுள்ளன. இவர்களுக்கு இடையே இடையர் வாழ்க்கையைக் குறிக்கும் சில காட்சிகளை சிற்பிகள் மலையடியில் காட்டியிருத்தல் போற்றத்தக்கது. அக்கால சிற்பிகளது கூர்ந்த அறிவு வியத்தற்குறியது. அக்காட்சிகளுள் வியக்கத்தக்கது ஒரு கறவையின் காட்சி. ஒருவன் பால் கறக்கிறான். பசு தன் கன்றை நக்குகிறது. இந்த வேலைப்பாடு தெளிவானதும் அழகானதும் ஆகும்.

கங்கைகரைக் காட்சி: ~இதனை அர்ச்சுனன் தவம் என்று பலர் கூறுவர்~. ஆனால் இங்குள்ள காட்சி அதற்கு மாறாக இருக்கிறது. மலை மீதிருந்து தண்ணீர் விழுந்து கொண்டிருக்கிறது. அதில் நாகர் மகிழ்ச்சியோடு நீராடல் பிராமணன் ஒருவன் தண்ணீர் குடத்தை தோள் மீது சுமந்து போதல்- நீர் அருந்த ஆற்றண்டை மான் ஒன்று வருதல் ஆற்றுக்கு மேற்புரம் இரண்டு அன்னப் பறவைகள் ஆற்றில் நீராடல் கீழ்ப்புரம் ஒரு சிறிய பெருமாள் கோவிலைச் சுற்றிலும் முனிவர் பலர் இருந்து தவம் செய்தல் இவர்களைப் பார்த்து பூனை ஒன்று பின்னங் கால்கள் மீது நின்று முன்னங் கால்களைத் தலைக்கு மேல் சேர்த்து யோக நிலையில் இருத்தல் அதனைக் கண்ட எலிகள் அச்சம் நீங்கி அன்பு கொண்டு அதனைப் பணிதல் ஆகிய காட்சிகள் இமையமலை அடிவாரத்தின் கங்கைக்கரை காட்சிகளாகவே காணப்படுகின்றன. ~இச்செய்திகள் அனைத்தும் மகாபாரதம் உத்தி;யோக பருவத்தி;;ல் கூறப்பட்டுள்ளவையே ஆகும~;. ~இவற்றை செதுக்கிய சிற்பிகளின் திறனை என்னவென்பது. பூனை தவம் செய்வதையும் காட்டி நகைச்சுவை ஊட்டும் அப்பேரறிஞர் கலை உணர்வே உணர்வு~.

நிறைவுரை:

பல்லவர்கள் தம் கலையுணர்வின் மிகுதியால் மாமல்லபுரத்தில் பல கோயில்களைக் கட்டினர். அதன் வளர்ச்சி நிலையே தமிழகத்தில் பல கட்டுமானக் கோயில்கள் தோன்றுவதற்கு காரணமாயிற்று. அவை இன்று பிரமாண்டமான கட்டடக்கலை இலக்கணத்துடன் கூடிய ஆலையங்கள் தோன்ற வழிவகுத்தன. கற்களுக்கு உயிர் கொடுத்து உணர்வூட்டி காண்போர் உணர்வைத் தட்டி எழுப்பி தமிழர்களைத் தலை நிமிர வைத்தவை மாமல்லபுரச் சிற்பங்கள் என்றால் மிகையாகாது.

**பார்வை நூல்கள்**:

பல்லவர் வரலாறு- டக்டர்.மா.இராசமாணிக்கனார் ஸ்ரீசெண்பகா பதிப்பகம் சென்னை.
தென்தமிழ் நாட்டுக் குடைவரைகள்- மு.நளினி இரா.கலைக்கோவன் சேகர் பதிப்பகம் சென்னை.
சைவ வைணவ புண்ணியத்தலங்கள்-இராமானந்த சுவாமிகள் வள்ளுவர் பண்ணை சென்னை.
தெய்வமணம் கமழும் திருத்தலங்கள்-பனையபுரம் அதியமான் வானதி பதிப்பகம் சென்னை.
பாண்டியர் வரலாறு- சதாசிவ பண்டாரத்தார்